/பதிவுத்துறை/

அனுப்புநர்
பதிவுத்துறை தலைவர்,
பதிவுத்துறை தலைவர் அலுவலகம்,
சென்னை-28.

பெறுநர்
1.அனைத்து துணைப்பதிவுத்துறை தலைவர்கள்,
2.அனைத்து மாவட்டப்பதிவாளர்கள் (நிருவாகம் மற்றும் தணிக்கை)
3.அனைத்து சார்பதிவாளர்கள்.

சுற்றறிக்கை எண்.423/சி1/2024, நாள் : 08.05.2024.

அய்யா,

பொருள்: ஆவணப்பதிவு – ஆவணப்பதிவுக்காக வரும் – ஆவணதாரர்களுக்கு ஆவணம் தொடர்பாக உரிய விவரங்கள் தெரிவிக்கப்படுவது – தொடர்பாக அறிவுரைகள் வழங்குவது குறித்து.

****

ஆவணப்பதிவு தொடர்பாக பதிவு அலுவலகத்திற்கு வரும் ஆவணதாரர்களால் பதிவுக்கு தாக்கல் செய்யப்படும் ஆவணங்களில் காணப்படும் சிறு பிழைகள் தொடர்பாக உரிய காரணங்களின்றி அலைக்கழிக்கப்படுவதாகவும், அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் தொடர்பாக சார்பதிவாளர்களால் பிற அலுவலர்களுக்கு/ பிற சார்பதிவகங்களுக்கு அனுப்பிவைக்கப்படும் கடித போக்குவரத்து ஆவணதாரர்களாகிய அவர்களுக்கு எவ்வித தகவலும் தெரிவிக்கப்படுவதில்லை எனவும் பதிவுத்துறை தலைவரின் கவனத்திற்கு வரப்பெற்றுள்ளது.

ஒரு நேர்வில் வங்கி ஒன்றால் உரியவாறு எழுதப்பட்ட விற்பனைச் சான்றாவணம் (Sale Certificate) உரிய கோர்வையின் பொருட்டு ஒரு சார்பதிவாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள நிலையில் அச்சார்பதிவாளர் அந்த ஆவணத்தில் கண்டுள்ள சொத்தானது தமது அலுவலக வரம்பிற்கு உட்பட்டதன்று என பிறிதொரு சார்பதிவகத்திற்கு அனுப்பிவைத்துள்ளார்.

இது குறித்து தொடர்புடைய வங்கிக்கோ, ஆவணதாரர்களுக்கோ எவ்வித தகவலும் தெரிவிக்கப்படவில்லை. இதனில் நீதிமன்றம் வரை செல்ல நேர்ந்து ஆவணதாரர் அவதியுற்றதாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் தனது கண்டனத்தையும் வருத்தத்தையும் பதிவு செய்துள்ளது. இவ்வாறான நேர்வுகளை

Verified © RealEstate™

இனிவரும் காலங்களில் அறவே நிகழாவாறு சார்பதிவாளர்கள் பதிவுக்கு தாக்கல் செய்யப்படும் ஆவணங்கள் குறித்த நிலையினை ஆவணதாரர்களுக்கு உரியவாறு தெரிவித்திடல் வேண்டுமென்றும் ஆவணதாரர்களால் உடனுக்குடன் சரிசெய்யத்தக்க சிறு பிழைகளுக்காக எக்காரணம் கொண்டும் ஆவணதாரர்களை அலைக்கழித்தலாகாது எனவும் இச்சுற்றறிக்கை வாயிலாக வலியுறுத்தப்படுகிறது.

மேற்படி சுற்றறிக்கையை பெற்றுக்கொண்டமைக்கு துணைத்தலைவர்கள் தங்களின் ஒப்புகையை அளிக்கவும் கோரப்படுகிறது.

ஒம்/-08.05.2024
பதிவுத்துறை தலைவர்

/ஆணையின்படி/

மாவட்டப்பதிவாளர் (ஆய்வு)

10/5/24

நகல்

1. அனைத்து உயர் அலுவலர்கள்,
   பதிவுத்துறை தலைவர் அலுவலகம்.
2. இயக்குநர் பதிவுத்துறை பயிற்சி நிலையம்,
   சென்னை.
3. முக்கிய ஆணைக்கோப்பு

Verified RealEstate